சுருக்கம்

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை – தேசிய நெடுஞ்சாலை எண் 7–ல் – திரு. ஆர். அயோத்திராமன் என்ற ஒப்பந்ததாரரால் தொடுக்கப்பட்ட சிவில் வழக்கு ஓ.எஸ்.எண் 384/2004–ன் மீது 07–08–2007 அன்று மதுரை முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் மீது சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட A.S.(MD) No.SR 65977/2011–ல் பல்வகை மனு M.P.(MD) No. 2/2012–ல் 29.6.2017 நாளிட்ட நீதிமன்ற உத்தரவின்படி ரூ.2,00,000/–ஐ 28.07.2017–க்குள் முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் வைப்பு தொகையாக செலுத்த அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.வி2) துறை

அரசாணை (நிலை) எண்.55 நாள் 25–07–2017.

ஹேவிளம்பி, ஆடி–9, திருவள்ளுவராண்டு 2048.

படிக்கவும்:-

1. அரசாணை (நிலை) எண் 320, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.வி.2) துறை, நாள் 21–12–2010.
2. தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கடித எண்.16136/ஒப்–1/ தேநெ/ 1999, நாள் 07.07.2017.
3. சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையின் A.S.(MD) No.SR 65977/2011–ல் பல்வகை மனு M.P.(MD) No. 2/2012–ல் 29.6.2017 நாளிட்ட தீர்ப்பு.

----

ஆணை:-

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), நெடுஞ்சாலைத் துறை அவர்கள் திரு.ஆர்.அயோத்திராமன், ஒப்பந்ததாரர், தே.நெ–7ல் கி.மீ.395/2 மெட்டூர் கேட் அருகில் சாலை மேம்பாலம் கட்டும் பணியில் அணுகு சாலை அமைக்கும் பணியினை ஒப்பந்த விதிகளின்படி 06.05.1996–க்குள் முடிக்க வேண்டிய பணிகளை மார்ச் 1998–ல் முடித்துள்ளதாகவும், மேற்காணும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும், பராமரிப்பு காலத்திலும் ஏற்படும் குறைபாடுகளை ஒப்பந்ததாரரால் சரி செய்யப்படாமல், துறையால் சரி செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அதற்காக ஏற்பட்ட செலவுத் தொகை ரூ.1,92,970/–ஐ ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்ய மாநிலக் கணக்காயர், அவர்களால் குறிப்பு வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்காணும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய இறுதி பட்டியல் தொகையிலிருந்து ரூ.1,18,753/– (வரிகள் மற்றும் நிறுத்தி வைப்புதொகை நீக்கலாக) பிடித்தம் செய்து மீதமுள்ள தொகை ரூ.74,217–2½ நிறுத்தி வைப்பு தொகையில் சரிகட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

2. திரு.ஆர்.அயோத்திராமன், ஒப்பந்ததாரர், அவர்கள் வெள்ள சேதாரங்கள் சீரமைப்பு பணிகளுக்கான செலவு தொகையினை பிடித்தம் செய்தது தவறு என்றும் இறுதி பட்டியல் தொகை ரூ.2,37,335/– முழுமையாகவும் முன்வைப்பு தொகை ரூ.25,000/– கூடுதல் வைப்பு தொகை ரூ.1,11,200/–க்கான தேசிய சேமிப்பு பத்திரங்களையும் அதற்கான வட்டியுடன் ரூ.51,83,721/– வழங்க உத்தரவிட கோரி மதுரை 3–வது சப் கோர்ட்டில் (1036/2001) வழக்கு தொடர்ந்ததை அடுத்து

இவ்வழக்கின் மதிப்பு தொகை ரூ.51.00 இலட்சங்களாக இருப்பதால் இந்த வழக்கு முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு (O.S.No.384/2004). ஒ.எஸ்.எண்.384/04 வழக்கின் மீது முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றம் தனது 07.08.2007 நாளிட்ட தீர்ப்பின்படி திரு.ஆர்.அயோத்திராமன் அவர்கள் ரூ.3,73,535/– பெற தகுதியுடையவராகிறார் எனவும், இத்தொகைக்கு 01.04.1998 முதல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் முடிய 12% வட்டியும், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை அளிக்கும் தேதி வரையில் 6% வட்டியும் வழங்கவும் ஆணையிட்டதாகவும் தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), நெடுஞ்சாலைத் துறை அவர்கள் தெரிவித்துள்ளார்.

3. மேலும் தனது கடிதத்தில் மேற்கண்ட வழக்கின் தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்வது குறித்து அரசு வழக்கறிஞரின் கருத்து கோரப்பட்டது என்றும், 19.08.2008 அன்று அரசு வழக்கறிஞர் இவ்வழக்கு மேல்முறையீடு செய்ய உகந்ததல்ல என கருத்து தெரிவித்தாகவும், இந்நிலையில் வழக்கின் வாதியான திரு. ஆர். அயோத்திராமன் அவர்கள் 04.02.2009 அன்று காலமாகிவிட்டதால் மேற்காணும் விவரங்கள் எடுத்துக்கொள்ளப்படாமல் இறுதிபட்டியல் தொகையான ரூ.2,37,335/–க்கும் மற்றும் தேசிய சேமிப்பு பத்திரங்களுக்கும் அதாவது ரூ.3,73,535/–க்கு வட்டியுடன் வழங்க தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதால் அரசு வழக்கறிஞரிடம் தீர்ப்பின்படி உள்ள தொகைக்கும், கணக்கில் உள்ளவாறு வாதிக்கு வழங்க வேண்டிய தொகைக்கும் உள்ள முரண்பாடு தொடர்பாக எடுத்துரைத்து சட்டக் கருத்துரை கோரப்பட்டதாக தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), நெடுஞ்சாலைத் துறை அவர்கள் தெரிவித்துள்ளார். அரசு வழக்கறிஞர் அவர்கள் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பு அதற்கு மாற்றாக மேல் முறையீடு செய்யப்பட வேண்டியுள்ளதால், மொத்த கணக்கீட்டுத் தொகையில் 50% தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துவிட்டு கீழமை நீதி மன்றத்தின் தீர்ப்பினை அமல்படுத்துவதற்கு தடை உத்தரவு பெறலாம் எனவும் சட்டக்கருத்துரை வழங்கினார் என தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), நெடுஞ்சாலைத் துறை அவர்கள் தெரிவித்துள்ளார்.

4. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு தடையாணை பெறுவதற்காக அரசு வழக்கறிஞரின் கருத்துரையின்படி திரு.ஆர்.அயோத்திராமன் அவர்களுக்கு முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி அளிக்க வேண்டிய தொகை வட்டியுடன் ரூ.7,91,893/– எனக் கணக்கீடு செய்யப்பட்டு, அதில் 50% ரூ.3,95,947/–ஐ முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் செலுத்துவதற்கு தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), நெடுஞ்சாலைத் துறை அவர்களுக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி ரூ.3,95,947/–ஐ பெற்று முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் 11.04.2011–ல் செலுத்தப்பட்டு, அதன் தொடர்ச்சியாக மேல்முறையீட்டு மனு எண் 65977/2011–ஐ 16.12.2011 அன்று சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் 16–12–2011 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட 29–06–2017 நாளிட்ட நீதிமன்ற உத்தரவில் நிர்வாக நடவடிக்கைகளின் காரணமாக மேல்முறையீடு செய்ய 1473 நாட்கள் காலதாமதமாகி உள்ளதால், காலதாமதத்தினை ஏற்க (to condone the delay) வழக்கின் வாதிக்கு மேலும் இன்றைய நிலையில் ரூ.4,65,519/– (ஏற்கனவே செலுத்திய தொகை போக மீதி தொகை அதன் வட்டியுடன்) அளிக்க வேண்டிய நிலையில் ரூ.2,00,000/– கூடுதலாக 28.07.2017–க்குள் முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் செலுத்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

6. எனவே, மேற்கண்ட நீதிமன்ற உத்தரவின்படி ரூ.2,00,000/–ஐ 28.07.2017–க்குள் முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் வைப்பு தொகையாக செலுத்த உரிய உத்தரவினையும், நிதி ஒதுக்கீட்டினையும் வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), நெடுஞ்சாலைத் துறை அவர்கள் அரசினைக் கோரியுள்ளார்.

7. தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையின் A.S.(MD) எண் SR 65977/2011–ல் பல்வகை மனு M.P.(MD) எண் 2/2012–ல், 29.6.2017 நாளிட்ட நீதிமன்ற உத்தரவின்படி ரூ.2,00,000/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) 28.07.2017–க்குள் முதலாவது மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் வைப்பு தொகையாக செலுத்துவதற்கு அரசு அனுமதித்து ஆணையிடுகிறது.

8. மேலே பத்தி 7–ல் குறிப்பிட்டுள்ள செலவினத்தை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "L அனாமத்து பல்வகை (C) ஏனைய கணக்குகள்" "8674–00– அரசு வைப்பீடு செய்யும் பிணைய வைப்பீடுகள் – 101 – அரசு வைப்பீடு செய்யும் பிணைய வைப்பீடுகள்–AB- நீதிமன்றங்களில் வைப்பீடு செய்யப்படும் பிணையத் தொகை.
>
> (த.தொ.கு.எண்.8674-00-101-AB-0004)

மேற்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று எழுதப்பட்டு பின்னர்

> "K" வைப்பீடுகள் முன்பணங்கள் (6) வட்டி பெறா வைப்பீடுகள் 8443–00 உரிமையியல் வைப்பீடுகள் – 104 – உரிமையியல் நீதிமன்ற வைப்பீடுகள் – AA – உரிமையியல் நீதிமன்ற வைப்பீடுகள் (த.தொ.கு. 8443-00-104-AA-000B) (வரவுகள்)" என்ற கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்.

9. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு அரசால் அனுமதிக்கப்பட்ட தொகையையும், மேலே அனுமதியளிக்கப்பட்டுள்ள தொகையையும் மத்திய அரசிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்குமாறு தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), நெடுஞ்சாலைத் துறை அவாகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 22/DS(KU)/PW-I/2017, நாள் 21–07–2017 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–25.
கண்காணிப்புப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.

நகல்:-
கூடுதல் தலைமைச் செயலரின் தனிச் செயலர், நெடுஞ்சாலைகள் மற்றும்
சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9.
நிதி (பொதுப்பணி.1) துறை, சென்னை–9.
கோ.எண் 8405/எச்.வி.2/2017.
இ.கோ/உ.கோ.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.